டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 8.9.2024 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 069 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# சமையல் எண்ணெய்க்கான எண்ணெய்ப் பனை தேசிய இயக்கத்தின் கீழ் 17 லட்சத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன

புது தில்லி, செப்.7

சமையல் எண்ணெய்க்கான எண்ணெய்ப் பனை தேசிய இயக்கத்தின் கீழ் நடத்தப்பட்ட எண்ணெய்ப் பனை நடவு இயக்கத்தின் ஒரு பகுதியாக இந்தியாவில் 15 மாநிலங்களில் 12,000 ஹெக்டேர் பரப்பளவில் 10,000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் 17 லட்சத்துக்கும் மேற்பட்ட எண்ணெய் பனைக் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.



2024 ஜுலை 15 அன்று தொடங்கப்பட்ட இந்த இயக்கம், நாட்டில் எண்ணெய்ப் பனை சாகுபடியை விரிவுபடுத்துவதில் மத்திய அரசு, மாநில அரசுகள், எண்ணெய் பனை பதப்படுத்தும் நிறுவனங்களின் கூட்டு முயற்சிகளை உள்ளடக்கியதாகும்.

2024 செப்டம்பர் 15 வரை தொடரும் இந்த இயக்கத்தில், ஆந்திரா, சத்தீஸ்கர், கோவா, குஜராத், கர்நாடகா, கேரளா, ஒடிசா, தமிழ்நாடு, தெலுங்கானா, அருணாச்சல பிரதேசம், அசாம், மணிப்பூர், மிசோரம், நாகாலாந்து, திரிபுரா உள்ளிட்ட மாநிலங்களில் நல்ல பங்கேற்பு காணப்படுகிறது.

பதஞ்சலி ஃபுட் பிரைவேட் லிமிடெட், கோத்ரேஜ் அக்ரோவெட், த்ரீ எஃப் ஆயில் பாம் லிமிடெட் போன்ற முன்னணி எண்ணெய்ப் பனை பதப்படுத்தும் நிறுவனங்களுடன் இணைந்து மாநில அரசுகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த முயற்சியில்




ஏராளமான விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறைகள், தோட்ட இயக்கங்கள், விளம்பர நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. இந்த நடவடிக்கைகள் விவசாயிகளுக்கு வெற்றிகரமாக விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளன.

2021 ஆகஸ்ட் இல் இந்திய அரசால் சமையல் எண்ணெய்களுக்கான தேசிய இயக்கம் தொடங்கப்பட்டது. எண்ணெய்ப் பனை சாகுபடியை விரிவுபடுத்துவதையும், எண்ணெய்ப் பனை துறையின் வளர்ச்சிக்கான மதிப்புச் சங்கிலி சூழல் அமைப்பை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. சமையல் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்கும், இறக்குமதி சார்புநிலையைக் குறைப்பதற்கும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், முக்கிய அங்கமாக எண்ணெய்ப் பனை தோட்ட இயக்கம் உள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் வளர்ப்பு மற்றும் பயன்படுத்தும் முறைகள் பற்றிய பயிற்சி

கோயம்புத்தூர், செப்.7

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பூச்சியியல் துறை மூலமாக ‘ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் வளர்ப்பு மற்றும் பயன்படுத்தும் முறைகள்‘ பற்றிய ஒரு நாள் பயிற்சி 10.9.24 (செவ்வாய்க்கிழமை)அன்று அளிக்கப்படும். பயிற்சியின் முக்கிய அம்சங்களாவன,

- ஒட்டுண்ணி வகைகள்
- ஊண் விழுங்கிகள், இரை விழுங்கிகள்
- நெல் அந்துப்பூச்சி வளர்ப்பு முறை
- டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி வளர்ப்பு
- புழு ஒட்டுண்ணி வளர்ப்பு
- கண்ணாடி இறக்கைப் பூச்சி வளர்த்தல்
- பொறிவண்டு வளர்ப்பு
- பப்பாளி மாவுப்பூச்சி ஒட்டுண்ணி அசரோபகஸ் வளர்ப்பு
- பயிர் பாதுகாப்பில் ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் பயன்பாடு

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 10.9.24 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 9.00 மணிக்குள்ளாக பூச்சியியல் துறைக்கு தங்கள் செலவில் வந்து சேர வேண்டும். பயிற்சியில் கலந்து கொள்வதற்கு ரூ.900/- (ரூபாய் தொள்ளாயிரம் மட்டும்) நேரிடையாக பயிற்சி நாள் அன்று செலுத்த வேண்டும். பயிற்சியானது காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம், கோயமுத்தூர்-641 003. தொலைபேசி எண் : 0422-6611214, 6611414, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# வேளாண்மை விரிவாக்க மையங்களில் மின்னணு பணபரிவர்த்தனை மூலம் இடுபொருட்கள் விநியோகம்

விருதுநகர், செப்.7

விருதுநகர் மாவட்டவேளாண்மை விரிவாக்க மையங்களில் மின்னணு பரிவர்த்தனை மூலம் இடுபொருட்கள் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் பருவகாலம் தொடங்கியுள்ளதால் வட்டாரங்களில் ஆங்காங்கே மழை பொழிந்து வருகிறது.

சம்பா பருவத்திற்கு தேவையான விதைகள், நுண்ணூட்ட கலவைகள், உயிர் உரங்கள், ஜிங்க் சல்பேட், ஜிப்சம் உள்ளிட்ட இடுபொருட்கள் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங் களிலும் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு மானியத்தில்




வழங்கப்பட்டு வருகிறது. விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் விவசாயிகள் தங்களுக்கு தேவையான வேளாண் இடுபொருட் களை ஏ.டி.எம் கார்டு, கூகுள் பே,போன் பே உள்ளிட்ட மின்னணு வசதிகள் கொண்ட பணமில்லா மின்னணு பரிவர்த்தனை மூலம் அரசு கணக்கில் செலுத்தி பெறுவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கும் பணமில்லா மின்னணு பரிவர்த்தனை செய்யும் கருவி வழங்கப்பட்டுள்ளது.

எனவே வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் இடுபொருட்களை வாங்க வரும் விவசாயிகள் இடுபொருட் களுக்கான முழுத் தொகை அல்லது பங்களிப்புத் தொகையை ஏ.டி.எம் கார்டு, கூகுள் பே,போன்பே மூலமாக செலுத்தி வேளாண் இடுபொருட்களைபெற்று பயனடையலாம். இந்த தகவலை விருதுநகர் மாவட்டவேளாண்மை இணை இயக்குநர் க.விஜயா தெரிவித்துள்ளார்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 07.09.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 35 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 36 | 42 |
| 1B | கத்திரி(Nadu) | 55 | 58 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 68 |
| 2 | வெண்டை | 22 | 25 | 58 | மேரக்காய் | 15 | 20 |
| 3 | தக்காளி (நாடு) | 18 | 22 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 36 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 18 | 22 | 60 | கேரட் | 80 | 88 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 55 | 60 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 45 |
| 6 | புடலை | 20 | 24 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 25 | 30 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 18 | 22 |
| 9 | பாகற்காய் | 25 | 30 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 22 | 28 | 66 | காளிபிளவர் | 38 | 42 |
| 11 | பூசணி | 15 | 20 | 67 | பட்டாணி | 170 | 175 |
| 12 | அரசாணி | 18 | 22 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 40 | 69 | இஞ்சி | 60 | 134 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 40 | 44 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 38 | 42 | 71 | பென்னி பீன்ஸ் | 80 | 88 |
| 16 | பெ.வெங்காயம் | 50 | 54 | 72 | குடமிளகாய் | 45 | 50 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 22 | 26 | 73 | | | |
| 18 | பச்சை மொச்சை | 45 | 50 | 74 | பஜ்ஜி மிளகாய் | 35 | 40 |
| 19 | முருங்கை | 28 | 32 | 71A | | | |
| 20 | தேங்காய் | 35 | 38 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | | | | 75 | எலுமிச்சை | 140 | 150 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 75 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 35 | 38 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 35 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 90 | 95 | 80 | திராட்சை | 100 | 110 |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 85 | 90 |
| 40 | கோவக்காய் | 25 | 28 | 91 | பூவன் | 55 | 60 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 55 | 60 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 66 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 34 | | | | |

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி

கோயம்புத்தூர், செப்.7

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் (வாயில் எண் 7, மருதமலை சாலை) கோயம்புத்தூரில் மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி 10.9.24 மற்றும்11.9.24 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும். கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- மசாலா பொடிகள்
- தயார்நிலை பேஸ்ட்
- காளான் ஊறுகாய்
- வாழைப்பூ ஊறுகாய்
- பாகற்காய் ஊறுகாய்
- கத்தரிக்காய் ஊறுகாய்
- வெங்காய ஊறுகாய்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/-(ரூ.1500/-+GST 18%) பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

# விதைப்பண்ணை அமைத்து கூடுதல் லாபம் பெற வேளாண்மைத் துறை அழைப்பு

நாமக்கல், செப்.7

நாமக்கல் மாவட்டம், வேளாண்மைத் துறையின் வேளாண் இணை இயக்குநர் (பொ) பேபிகலா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது, மாவட்டத்தில் சம்பா பருவத்தில் சராசரியாக நெல் பயிர் 8,700 ஹெக்டேர், சிறுதானியங்கள் பயிர் 76,000 ஹெக்டேர், பயறு வகைப்பயிர்கள் 12,000 ஹெக்டர், எண்ணெய் வித்துக்கள் பயிர்கள் 33,000 ஹெக்டேர் சாகுபடி செய்யப்படுகிறது.





சாகுபடி செய்யப்படும் பயிர்களில் கூடுதல் லாபம் பெற வேளாண்மைத் துறையில் விதைப் பண்ணையாக பதிவு செய்து களப் பணியாளர்களின் வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்புகள் உயர் தொழில் நுட்பங்களை பின்பற்றி சாகுபடி செய்ய வேண்டும்.

அப்போது சராசரியாக பெறும் மகசூலை விட கூடுதலாக மகசூல் ஈட்ட முடியும். அத்துடன் விதைப் பண்ணை மூலம் பெறப்படும் விதைகளுக்கு சந்தை விலையை விட கூடுதலாக அரசு டான்சிடா கொள் முதல் விலை பெற முடியும். இதனால் விவசாயிகள் நல்ல வருவாய் ஈட்ட முடியும். நடப்பாண்டில் விதைப்பண்ணை சாகுபடியை ஊக்கவிக்கும் வகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு நெல் பயிர் தலா 1.0 ஹெக்டேர், சிறுதானியங்கள் ஆதி திராவிடர் 2.50 ஹெக்டேர், பழங்குடியினருக்கு 1.40 ஹெக்டர், பயறுவகைப் பயிர்கள் ஆதி திராவிடருக்கு 5.70 ஹெக்டேர், பழங்குடியினருக்கு 3.2 ஹெக்டர், எண்ணெய் வித்துக்கள் பயிர்கள் ஆதி திராவிடருக்கு 10.0 ஹெக்டேர், பழங்குடியினருக்கு 8.0 ஹெக்டர் அளவில் விதைப்பண்ணை அமைத்து பயன் பெற தனி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, நடப்புப் பருவத்தில் நெல், சிறுதானியங்கள், பயறுவகைப்யிர்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் பயிர்கள் சாகுபடி செய்யும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள். இந்த ஆண்டு அதிகளவில் விதைப்பண்ணைகள் அமைத்து பயனடைய தங்கள் அருகாமையிலுள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறலாம் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்து உள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




பயோ நெமட்டான்

Stanes

பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?

பயன்படுத்துவீர்...

பயோ நெமட்டான்

"நூற்புழுக்களின் எதிரி"

இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.

- அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
- மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.

வேர் முடிச்சுகள்



வேர் வீக்கம்



வேர் அழுகல்



டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com

84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948 திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935 வேலூர் : 91 93449 14938

# முதன்மை வேளாண் விரிவாக்க மையங்களில் பணமில்லா பரிவர்த்தனை மூலமாக மட்டுமே இடுபொருட்களை பெற்றுக் கொள்ளலாம்

புதுக்கோட்டை, செப்.7

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மை விரிவாக்க மையங் களில் செயல்படுத்தப்பட்டு வரும் பணமில்லா பரிவர்த்தனை யினை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளலாம் என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம்.ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் பணமில்லா பரிவர்த்தனை தமிழ்நாடு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரால் சட்ட மன்றத்தில் 2022-23 ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், வேளாண்மை விரிவாக்க மையங்களில் புதிய மின்னனு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பணமில்லா பரிவர்த்தனை முறை செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இடுபொருட்களை பெறும்போது தங்களது பங்களிப்பு தொகையை கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு, கூகுள்பே, போன்பே, பிஎச்ஐஎம் மற்றும் ஒருங்கிணைந்த பணப் பரிவர்த்தனை (யு.பி.ஐ) ஆகியவற்றின் மூலம் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம் முதற்கட்டமாக கடந்த ஆண்டு தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு ஒரு வட்டாரத்தில் செயல் படுத்தப்பட்டது. இதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் மேற்கண்டவாறு பணமில்லா பரிவர்த்தனை முறை செயல்படுத்தப்பட்டது. தற்போது அனைத்து வட்டாரங்களில் உள்ள முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் செயல்படுத்திட விரிவுபடுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்க மையங்களிலுள்ள பணியாளர் களுக்கு பணமில்லா பரிவர்த்தனை முறையை செயல் படுத்துவதற்கான பயிற்சி வழங்கப்பட்டு, விற்பனை முனை கருவிகள் அல்லது ஒருங்கிணைந்த பணப்பரிவர்த்தனை மூலம் பண பரிவர்த்தனை செய்திடும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் வரும் திங்கட்கிழமை

9.9.24 முதல் பணமில்லா பரிவர்த்தனை மூலமாக மட்டுமே விவசாயிகள் தங்கள் பங்களிப்பு தொகையினை செலுத்தி இடுப்பொருட்களை பெற்று கொள்ள முடியும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் செயல்படுத்தப்படும், இந்த பணமில்லா பரிவர்த்தனை நடைமுறை களை மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தி பயனடையலாம் என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம். ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



# அழிந்து வரும் கிடைத் தொழில்? ஏன் தெரியுமா?



முன்பெல்லாம் ஆட்டு கிடை, மாட்டு கிடை போடுதல் சித்திரை பிறந்தாலே நிலத்தில் ஆடுகளையும், மாடு களையும் ஒரு இரவு தங்க வைப்பார்கள். அண்மை நிலவரப்படி நம்நாட்டிலே 202 கால்நடை இனங்கள் இருப்பதாகவும், அதில் கிடை போட 75 இனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 46 சமூகங்களை சேர்ந்த 1.3 கோடி கிடைக்காரர்கள் நாட்டினக் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். அதுவும் இன்றைய கால கட்டத்தில அழிந்து வருவதாக தரவுகள் உள்ளன.

**ஏன் இந்த அழிவுகள்**

1) முன்பெல்லாம் கிராமப்புறங்களில் வீட்டுக்கு வீடு மாடு வைத்திருந்த காலத்தில், மாடுகளை கிடைக்கு அனுப்பி வையுங்கள். 3 மாதம் கழித்து மாடுகளை திருப்பி தந்து விடுகிறோம் என்று கிடைக்காரர்களின் கீதாரி வாங்கி மாடுகளை அழைத்து செல்லுவார்கள். ஒரு கிராமத்தில் 100, 200 மாடுகள் இருந்தன. ஆனால் இன்றைய நிலையில் மாடுகளோ இல்லாத நிலை கிராமப்புறங்களில்.

2) பசுமை புரட்சியின் காரணமாக உணவு உற்பத்தி பெருகியதை மட்டும் நாம் பார்க்கிறோம். இதனுடைய பின் விளவுகளால் பாரம்பரிய விவசாய முறைகள் பெரும்பாலும் மறைக்கப்பட்டு, அழிக்கப்பட்டுள்ளன.

3) என்று டிராக்டர் அறிமுகம் செய்யப்பட்டதோ, அன்றே விவசாயம் படுத்து விட்டது. இதைத்தான் அன்றைய தினத்திலே ஜே.சி குமரப்பா என்ற பொருளாதார வல்லுநர், இந்த டிராக்டர் சாணி போடுமா? என்று பேசியதில் எவ்வளவு அர்த்தம் இருக்கிறது என்பது இன்று தான் தெரிகிறது.

4) மாடுகளும் கிடைபோடும் கீதாரிகளும் இல்லை. படிப்படியாக இவை எல்லாமே குறைந்து வருகின்றன.

**ஆட்டுக்கிடைக்கும் மாட்டுக்கிடைக்கும் என்ன வேறுபாடு? தெரியுமா?**

ஆட்டுக்கிடை, மாட்டுக்கிடைக்கு ஒரு பழமொழி உண்டு.

ஆட்டுக்கிடை போட்டால் அவ்வரும், 'மாட்டுக்கிடை போட்டால் மறு வரும் என்பார்கள்.

மாட்டு சாணத்தில் நார்சத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அவை மக்கி நிலம் எடுத்துக் கொள்ள சிறிது காலம் பிடிக்கும். ஆனால் ஆட்டு சாணத்தில் நார்சத்து குறைவு. ஆகவே ஆட்டுசாணத்தை எளிதாக மக்கி பயிர் உடனே எடுத்துக் கொள்ளுகிறது. மண்ணின் வளத்தை மேம்படுத்த ஆட்டுகிடை, மாட்டு கிடை பயன்படுத்தபடுகிறது.

**கிடையால் நில சீர்திருத்த பண்ண முடியுமா?**

1) மண்ணின் வளம் என்பது நிர்ணயிக்கப்படும், காரணிகள் மூன்று. அது இயற்பியல், வேதியியல், உயிரியல் பண்பைப் பொருத்தது. களர் மற்றும் உவர் (உப்பு) நிலங்களை சரி செய்யலாம்.

2) ஆடு, மாடுகளின் சிறுநீர் (URINE) மண்ணின் சோடியம், பொட்டாசியம் உப்புகளைச் சமன்படுத்துகிறது.

3) சாணத்தால், பயிருக்கு தேவையான தழை, மணி, சாம்பல் சத்து மற்றும் நுண்ணூட்ட சத்து கிடைக்கிறது.

**மேய்ச்சல் நிலம், கிடைக்கார்களின் எதிர்காலம் எப்படி?**

மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்கார்கள் நலனுக்காக, சர்வதேச ஆண்டாக வருகிற 2026-யை ஐ.நா. அறிவிக்க உள்ளது. (INTERNATIONAL YEA OF RANGELANDS AND PASTORALISTS 2026) இந்த தீர்மானம் ஐ.நாவில் 2022ஆம் ஆண்டு மார்ச் 15ஆம் தேதி நிறைப்வேற்றப்பட்டது குறிப்பிடத் தக்கது.

பாரம்பரியத்தை கடைபிடிப்போம். நோயின்றி வாழ்வோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உலக ஊட்டச்சத்து வாரத்தை முன்னிட்டு எண்ணெய் மற்றும் அடுப்பில்லா சமையல்

## செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

திண்டுக்கல், செப்.7

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரத்தை சேர்ந்த கதிரணம்பட்டி கிராமத்தில் காந்திகிராமம் பல்கலைக்கழக வேளாண் மற்றும் கால்நடை அறிவியல் கல்லூரியில் இளங்கலை வேளாண்மை பட்டப் படிப்பு பயிலும் மாணவிகள் புவனேஸ்வரி, பவானி, அக்ஷிதா, அபிதா தேவி ஆகியோர் தங்களின் ஊரக வேளாண்மை பணி அனுபவ திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வருகின்ற அவர்கள் உலக ஊட்டச்சத்து வாரம் மற்றும் ஆசிரியர் தினத்தை ஒட்டி கதிரனம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் எண்ணெய் மற்றும் அடுப்பில்லா சமையல் என்னும் தலைப்பில் நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர்.

இதில் அவுல் சாதம், கேரட் பொரியல், பீட்ரூட் பொரியல், வாழைக்காய் பொரியல், சாம்பார், பச்சைப்புளி ரசம், தயிர் சாதம், பொட்டுக்கடலை லட்டு, அவுல் லட்டு, அவுல் கொழுக் கட்டை, செம்பருத்தி பானம், தேங்காய் பாயாசம், கேழ்வரகு மில்க் சேக், பலசாலட், கேரட் கொசிலி ஆகிய உணவுகளை எண்ணெய் மற்றும் அடுப்பில்லா முறையில் சமைத்து வழங்கினர்.

**அவுல் கொழுக்கட்டை செய்முறை**

அவுல் மற்றும் பொட்டுக்கடலையை பொடி செய்து அதில் நாட்டு சர்க்கரை சிறிதளவு ஏலக்காய் தூள் சேர்த்து தேங்காய் பால் மற்றும் நெய் சேர்த்து அச்சில் பிடித்து எடுக்க வேண்டும்.

**கேழ்வரகு மில்க் சேக் செய்முறை விளக்கம்**

தேங்காய் பாலுடன் முக்கால் பங்கு ராகி மாவை சேர்த்து கலந்து தேவையான அளவு நாட்டுச்சர்க்கரை சேர்த்து கலக்க வேண்டும். இதில் முந்திரி பாதாமை பொடித்து போட வேண்டும் . இவ்வாறு கேழ்வரகு மில்க் சேக் தயாராகிவிடும்.

## செம்பருத்தி பானம் தயாரிக்கும் முறை

செம்பருத்தி பூவின் இதழை அரைத்து சாறெடுத்து அதில் தேவையான அளவு நாட்டு சர்க்கரை சேர்த்து தண்ணீருடன் கலந்து சிறிதளவு எலுமிச்சை சாறு மற்றும் சப்ஜா விதைகளை சேர்க்க வேண்டும்.




இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெயஸ்ரீ, தலைமையில் சுகாதார அலுவலர் தனபால் மற்றும் அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் பொன் தமிழரசு ஆகியோர் முன்னிலையில் சிறுதானிய செயல்விளக்க பயனாளி ஆரோக் கியம் மற்றும் மாணவிகள் அனைவரும் செய்து காட்டினர். அலுவலர்கள் அதன் சுவையை நிர்ணயம் செய்து மாணவி களின் முயற்சியை பெரிதும் பாராட்டினர். மாணவர்களும் ஆரவாரத்துடன் பங்கேற்று மகிழ்ந்தனர். மாணவர்கள் அனைவருக்கும் செய்யப்பட்ட உணவுகளை வழங்கினர். பள்ளி மாணவர்கள் மன நிறைவுடன் நன்றி கூறினர்.



# சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத்தில் செலவற்ற இயற்கை விவசாயமும் செறிவூட்டப்பட்ட மண் வளம் பற்றிய ஒரு நாள் பயிற்சி

திருச்சி, செப்.7

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி, வேளாண் அறிவியல் நிலையம் மூலம் பலவகையான பயிற்சிகள் வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டுவருகின்றன. அதன் ஒரு பகுதியாக செலவற்ற இயற்கை விவசாயமும் செறிவூட்டப்பட்ட மண்வளம் பற்றிய பயிற்சி என்ற தலைப்பில் நிலையப் பயிற்சி 20.9.24, வெள்ளிக்கிழமை அன்று காலை 9.30 மணி அளவில் நடைபெறுகிறது.




இப்பயிற்சியில் அங்கக சிறப்பு இடுபொருட்கள், தயாரிப்பு, உயிர் உர தொழில்நுட்பம், பண்ணைக்கழிவுகள் மறு சுழற்சி, இயற்கை விவசாயத்தில் களை மேலாண்மை, கரிம களை மேலாண்மை பற்றிய தொழில்நுட்பங்கள் விளக்கப்படும். கலந்து கொள்ள விரும்பும் ஆர்வமுடைய விவசாயிகள் கீழ்காணும் எண்களை தொடர்பு கொண்டு 19.9.24, வியாழக் கிழமை மாலைக்குள் முன் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. கலந்து கொள்ளும் விவசாய பெருமக்களுக்கு மதிய உணவு வழங்கப்படும்.

முன் பதிவு & மேலும்விவரங்களுக்கு : 91717 17832 / 0431-2962854, 63811 86765, 99424 49786, 81225 86689. குறிப்பு : அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளவும்.

இதனை, முனைவர் சி. ராஜாபாபு, திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சிறுகமணி, திருச்சி மாவட்டம் தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நெற்பயிரைத் தாக்கும் இலை சுருட்டு புழு மற்றும் மேலாண்மை



நெல் இலை அடைப்பு நோய் மடிந்த இலைகளால் வகைப் படுத்தப்படுகிறது, அவை வெள்ளை மற்றும் உலர்ந்ததாக மாறும். நெற்பயிர்களில் காணப்படும் பொதுவான நோய்களில் இதுவும் ஒன்று. பயனுள்ள மேலாண்மை நடவடிக்கைகள் இல்லாமல், பூச்சிகளை சமாளிப்பது எளிதல்ல.



## இலை சுருட்டுபுழு அறிகுறிகள்

● நெல் இலை சுருட்டுநோயின் பொதுவான அறிகுறி இலைகளின் நீளமான மடிப்பு ஆகும். இந்த மடிப்புக்குள் பூச்சியின் லார்வாக்கள் வசிக்கின்றன.

● இது பச்சை நிற திசுக்களை உண்பதால், இலைகள் வெள்ளை யாகவும், பின்னர் உலர்ந்ததாகவும் இருக்கும். வயலில் கடுமை யான தாக்குதலின் கீழ், அனைத்து பயிர்களும் ஒரே மாதிரியான அறிகுறிகளைக் காட்டுகின்றன மற்றும் வயல் கருகியதாக இருக்கும்.

## இலை சுருட்டுபுழு மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை




● கால்டான் 4ஜி என்பது ஒரு பூச்சிக் கொல்லியாகும், இது முறையான மற்றும் தொடர்பு முறைகள் மற்றும் வயிற்றில் செயல்படும். இது கம்பளிப்பூச்சிகளை திறம்பட அகற்றக்கூடிய நெரிஸ்டாக்சின் அனலாக் குழுவிற்கு சொந்த மானது. இது சுற்றுச்சூழல் நட்பு மற்றும் பூச்சிகளின் அனைத்து நிலைகளுக்கும் எதிராக நீண்ட காலத்திற்கு பயனுள்ளதாக இருக்கும். நீங்கள் மற்ற பூச்சிக் கொல்லிகள் மற்றும் பூஞ்சைக் கொல்லிகளுடன் இணைந்து பயன் படுத்தலாம். ஒரு ஏக்கருக்கு 7.5 முதல் 10 கிலோ வரை பரிந்துரைக் கப்படுகிறது, மேலும் 2-3 நாட்களுக்குப் பிறகு தண்ணீர் தேங்க வேண்டும்.

● டால்ஸ்டார் எஃப்எம்சி பூச்சிக்கொல்லியில் பைஃபென்த்ரின் 10% உள்ளது, இது பரந்த அளவிலான பாக்டீரிசைடு மற்றும் பூச்சிக்கொல்லி பண்புகளை வழங்குகிறது. மெல்லும் பூச்சிகள் மற்றும் கரையான்களுக்கு எதிராக இது மிகவும் பயனுள்ளதாக




இருக்கும் (இது மண் துகள்களுடன் ஏலம் எடுக்கும் போது). இது அதிக வெப்பநிலையில் கூட நிலையாக இருக்கும் மற்றும் குறைவான எரிச்சலை ஏற்படுத்துகிறது. மருந்தளவு ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி அல்லது ஏக்கருக்கு 200 மில்லி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.




- 5% எமாமெக்டின் பென்சோயேட்டால் ஆன ரிலான் பூச்சிக் கொல்லியானது லெபிடோப்டெரான் பூச்சிகளுக்கு எதிராக ஒரு தனித்துவமான பொறிமுறையின் மூலம் செயல்பட முடியும். இது இலைகளால் உறிஞ்சப்பட்டு, இலைகளுக்குள் ஒரு நீர்த்தேக்கமாக இருக்கும். பூச்சி இலைகளை உண்ணும்போது அதன் தசைகளை சுருங்கச் செய்யும் இரசாயனத்தை வெளியிட்டு அவை இறந்துவிடும். இந்த நீரில் கரையக்கூடிய துகள்கள் ஒரு லிட்டர் தண்ணீரில் 0.5 கிராம் அளவு உள்ளது.

- ஹிபிக்கி பூச்சிக்கொல்லி என்பது ஒரு ஆர்கனோபாஸ்பரஸ் தயாரிப்பு ஆகும், இது விரைவாகச் செயல்படுகிறது மற்றும் தொடர்பு மற்றும் வயிற்று நடவடிக்கை மூலம் பல்வேறு வகையான பூச்சிகளில் வேலை செய்கிறது. இதில் 50% குளோர்பைரிபாஸ் உள்ளது, இது நீண்ட காலத்திற்கு வேலை செய்கிறது. மருந்தளவு லிட்டருக்கு 1.2 மிலி அல்லது ஏக்கருக்கு 200 மிலி.




- பின்வரும் பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை பொருளாதார வாசலில் தெளிக்கவும். ஃபோசலோன் 35 இசி 1500 மிலி/எக்டர், கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 50% எஸ்பி 1 கிலோ/எக்டர், குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5 எஸ்சி 150 மிலி/ஹெக்டர், குளோர்பைரிபாஸ் 20 இசி, 1.25 எல்/ஹா50 1500 கிராம்/எக்டர், ட்ரைஅசோபோஸ் 40 இசி 625-1250 மிலி/எக்டர், டைக்ளோர்வோஸ் 76 எஸ்சி 627 மிலி/எக்டர், அசாடிராக்டின் 0.03% 1000மிலி/எக்டர் மற்றும் ஃப்ளூபெண்டியாமைடு 39.35 எம்/எம்எஸ்சி 50 கிராம்/எக்.




- டிரைக்கோகிராமா கைலோனிஸ்என்னும் முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 சிசி (40000 முட்டைகள்) வீதம், மூன்று முறை, அதாவது, நடவு நட்ட 37, 44, 51 நாட்களில் வயலில் வெளியிடவேண்டும்.

- வயலில் கட்டுகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

- TNAULFR 831311, காவேரி, ஆகாஷ், TKM 6, IET 7811, IET 9797 போன்ற சகிப்புத்தன்மை கொண்ட பயிர்களை வளர்க்கவும்.

● வேதியியல் அல்லது உயிரியல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பயன்படுத்துவது இந்த நோயைத் தடுக்க சிறந்த வழியாகும்.

● நைட்ரஜன் உரங்களை அதிகமாக பயன்படுத்துவதை தவிர்க்கவும் பரிந்துரைக்கப்படுகிறது.

இதனை **வி.லோகேஷ், வெ.லாவண்யா, முனைவர் செ.பழனிவேல், இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, கண்ணனூர், துறையூர், திருச்சி மாவட்டம் – 621206.**



# தேசிய ஊட்டச்சத்து வாரமான செப்டம்பர் முதல் வாரத்தில் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



திண்டுக்கல், செப்.7

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 1 முதல் 7 வரை தேசிய ஊட்டச்சத்து வாரம் கொண்டாடப்படுகிறது. இந்த வாரம் கொண்டாடப் படுவதன் முக்கிய நோக்கம், சிறந்த ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதும், வாழ்வில் சத்தான உணவின் முக்கியத்துவம் பற்றிய தகவல்களை வழங்குவதும் ஆகும்.இந்தியாவில் 1982 முதல் தேசிய ஊட்டச்சத்து வாரம் கொண்டாடப்படுகிறது. ஊட்டச்சத்து குறைபாட்டை சமாளிக்கவும் சமச்சீர் உணவை ஊக்குவிக்கவும் இந்தியாவில் தேசிய ஊட்டச்சத்து வாரம் கொண்டாடப்படுகிறது.




அந்த வகையில் திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் இளநிலை வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவிகள் விஸ்வப்பிரியா, முத்து ஸ்ரீஅபிராமி, விசாலினி, அப்ஸானா சஃப்ரீன் ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தில் தேனி அருகே சின்னமனூர் வட்டாரம் மார்க்கையன்கோட்டையில் உள்ள அரசு கள்ளர் தொடக்கப் பள்ளியில் உள்ள மாணவர்களுடன் தேசிய ஊட்டச்சத்து வாரத்தை கொண்டாடினர். அதில் கீரைகள் ,காய்கறிகள் உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் அவசியம் என்று மாணவர் களுக்கு விளக்கமளித்தனர். மேலும் பல்வேறு கீரைகளின் மருத்துவ குணங்கள் பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வேளாண்மைத் துறையில் மின்னணு பரிவர்த்தனை மூலம் இடுபொருட்கள் வினியோகம்



இராமநாதபுரம், செப்.7

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வட்டார விவசாயிகளுக்கு திருப்புல்லாணி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் கூறியதாவது, வேளாண்மை துறையில் மின்னணு பரிவர்த்தனை மூலம் வேளாண் இடு பொருட்கள் வினியோகம் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மை துறையின் கீழ் செயல் படும் வட்டார விரிவாக்க மைய கிடங்குகளில் இருந்து வினியோகம் செய்யப்படும் விதை, உயிர் உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், நுண்ணூட்ட கலவைகள், விசை தெளிப்பான்கள், பண்ணை கருவிகள் மற்றும் தார்பாய்கள் உள்ளிட்ட அனைத்து இடு பொருட்களையும் விவசாயிகள் தங்கள் ஏடிஎம் கார்டு மற்றும் யு.பி.ஐ & ஐ.டி. மூலமாக எந்த சிரமமும் இல்லாமல் எளிதில் பெற முடியும். அனைத்து விவசாயிகளும் இந்த வசதிகளை எளிதில் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் வேளாண் விரிவாக்க மையங்களுக்கு விற்பனை முனைய கருவி வழங்கப் பட்டு மின்னணு பரிவர்த்தனை முறை அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது. எனவே, மண்டபம் வட்டாரத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் இந்த வசதியை பயன்படுத்தி இடுபொருட்கள் வாங்கிட முன்வர வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

# மல்பெரி பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பயிற்சி

திருச்சி, செப்.7

திருச்சி, சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு நிலைய மற்றும் களப் பயிற்சிகள் நடைபெற்று வருகின் றன. மல்பெரி வடிகால் வசதி கொண்ட வண்டல் கலந்த களிமண் மற்றும் நல்ல நீர்பிடிப்பு திறன் கொண்ட வளமான மண்ணில் நன்றாக வளரக்கூடியது. காரஅமில நிலை 6.2 முதல் 6.8 உள்ள மண்ணில் மிகவும் நன்றாக வளரும். இதன் ஒரு பகுதியாக மல்பெரி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 12.9.24 அன்று மட்டபாறைப் பட்டி கிராமம், வையம்பட்டி வட்டாரத்தில் மல்பெரி பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த களப்பயிற்சி நடைபெற உள்ளது. ஆகவே பயிற்சிக்கு முன்பதிவு செய்ய விரும்புபவர்கள் முனைவர் ஷீபா ஜாஸ்மின் (பயிர் பாதுகாப்பு) 81225 86689, 0431 2962854 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம். மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர்முனைவர் சி.ராஜாபாபு தெரிவிக்கிறார்.

# அயோத்தியாபட்டணம் வட்டாரத்தில் தேனீப்பெட்டிக்களை கையாளும் போது செய்யக்கூடாதவை

1. தேன் பெட்டிகளில் தேனீ கூட்டங்களில் செயல்திறனை அறிந்து கவனமான முறையில் பராமரிப்பு செய்தால் மட்டுமே அதிகமாக பலன் அடையலாம். இதற்குத் தவறாமல் தேனீப்பெட்டிகளை ஆய்வு செய்தல் இன்றியமையாதது.

2. முக்கியமாக தேனீப் பெட்டியை நன்கு சுத்தம் செய்து வைக்க வேண்டும். இவ்வாறு ஆய்வு செய்யும்பொழுது ராணித் தேனீயின் செயல்பாட்டுத்திறன் தேன் மற்றும் மகரந்தம் இருப்பு நிலை பூச்சிகள் நோய்கள் தாக்குதல் போன்றவற்றை அறிந்து தகுந்த நேரத்தில் தேவையான சில பாதுகாப்பு வேலைகளையும் செய்ய சுலபமாக இருக்கும்.

3. பெட்டிகளை ஆய்வு செய்யும்பொழுது மிகவும் கவனமுடன் கையாளுதல் அவசியம்.

4. தேனீக்களிடம் கொட்டு வாங்காமல் பெட்டிகளை ஆய்வு செய்ய சில யுக்திகளைக் கடைபிடிக்க வேண்டும்.

**செய்யக்கூடாதவை**

1. அதிகக் காற்று, மழை, பனி உள்ள நேரங்களிலும் இரவு நேரங்களிலும் பெட்டியைத் திறக்கக் கூடாது.

2. நுழைவு வழியை மறைத்து நிற்கக் கூடாது.

3. அடைச் சட்டங்களை எடுக்கும்போதும், அடைகளை மீண்டும் வைக்கும்போதும் தேனீக்கள் நசுங்கிச் சாகவிடக் கூடாது.

4. அடைக்கு அருகில் கை விரல்களை விரைவாக நீட்டுதல், கைகளை விரைவாக அசைத்தல் கூடாது.

5. தேனீக்கள் கொட்டவரும்போது, கைகளைத் தலையைச் சுற்றி வீசித் தடுத்தல், அடைச் சட்டங்களை வீசி எறிந்துவிட்டு ஓடுதல் கூடாது.

6. தேனீக்கள் கருப்பு நிறத்தை ஆபத்தாக கருதுகின்றன. எனவே கருப்பு நிற ஆடைகளை அணிந்து திறக்கக் கூடாது.

7. ஆய்வு செய்பவர் வாசனைத் திரவியங்கள், தைலங்கள், சிகை சோப்புக்குழம்புகள் (Shampoo) போன்றை பயன்படுத்தக் கூடாது.

8. ஆய்வு செய்பவரின் உடலிலிருந்து வியர்வை நாற்றம் வெளிப்படக்கூடாது.

9. அளவுக்கு அதிகமாகப் புகையைப் பயன்படுத்தக் கூடாது.

10. புகையை உருவாக்க செயற்கை இழை கொண்டு உருவாக்கப் பட்ட கிழிந்த துணிகளையோ அல்லது ரப்பர் பொருட்களையோ பயன்படுத்தக் கூடாது.

11. மிகக் குறுகிய காலமே புகை தரவல்ல சுள்ளி, காய்ந்த இலைச் சருகு அல்லது வைக்கோல் ஆகியவற்றைப் பயன்படுத்தி புகை உருவாக்கக் கூடாது.

12. சூடான புகையைப் பயன்படுத்தக் கூடாது.

13. உடற்பகுதியில் விட்டுச் செல்லப்பட்ட கொடுக்கை இருவிரல் கொண்டு எடுக்கக் கூடாது. இதனால் நச்சுப்பை நசுக்கப்பட்டு அதிக விம் உட்செலுத்தப்படும்.

14. தேனீப் பெட்டிகளை தேவையில்லாமல் அடிக்கடி திறந்து பார்க்கக் கூடாது.

15. இதனை கடை பிடித்தால் தேனீக்களிடமிருந்து கொட்டு வாங்காமல் இலகுவாக கையாளலாம் என சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டணம் வேளாண்மை உதவி இயக்குநர் த.சரஸ்வதி தெரிவித்தார்.




# வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு களப்பயிற்சி



திண்டுக்கல், செப்.7

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய பல்கலைக்கழக வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் இளங்கலை வேளாண்மை பயிலும் 4ஆம் ஆண்டு மாணவர்கள் கு.சிவ அனவரதன், ம.தமிழ்முழக்கன், தி.கருப்பணன், மு.ரூபன் மற்றும் ஐ.ஜெய்சன் ஐசக் ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் திருச்சி, லால்குடி வட்டாரம், சிறுமயங்குடி ஊராட்சியில் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக மாணவர்கள் சிறுமயங்குடி பகுதியில் வேளாண்மை உதவி இயக்குநர் சுகுமார், வழிகாட்டுதலின்படி கிராமத்தில் களப் பயிற்சியில் ஈடுப்பட்டனர். பயிற்சியின் போது, நெற்பயிரில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலின் அறிகுறிகள், சத்து குறைபாடுகள் ஆகியவை மாணவர்களுக்கு வேறுபடுத்திக் காட்டி, விவசாயிக்கு உரம் மற்றும் பூச்சி மேலாண்மை போன்ற ஆலோசனைகளை வேளாண்மை உதவி இயக்குநர் சுகுமார் வழங்கினார். மேலும் அவுரி பயிரிட்ட வயலுக்கு சென்று பார்வையிட்டனர்.

# வருமானம் பெருகிட வரகில் ஊடுபயிர்

வரகு பொதுவாக தனிப்பயிராகவே தமிழகத்தில் பயிரிடப்படுகிறது. பாதுகாப்பான விளைச்சல், அதிக இலாபம் மற்றும் மண் வளத்தைக் காக்க ஊடுபயிரிடுதல் அவசியமாகிறது. வரகுடன் ஊடு பயிராக துவரை, அவரை மற்றும் நிலக்கடலை ஆகிய பயிர்களில் ஒன்றை எட்டு வரிசை வரகுக்கு இரண்டு வரிசை ஊடுபயிர் (8:2) என்றளவில் விதைக்கலாம். வரகில் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு இலாபத்தைக் கூட்டவும் ஊடுபயிர் சாகுபடி மிகவும் சிறந்ததாகும். மானாவாரி மற்றும் வறண்ட நிலப்பகுதியிலும், மண்வளம் குறைந்த இடங்களிலும் ஊடுபயிராக நிலக்கடலை, பச்சைபயறு மற்றும் உளுந்து போன்ற பயறு வகை பயிர்களை சாகுபடி செய்யும் போது மண்வளம் கூடும். இந்த சாகுபடி முறைக்கு குறைந்த அளவு தண்ணீர், குறைந்த அளவு இடுபொருள் மேலும் குறைந்தளவு பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இருக்கும். ஒரு களை எடுத்தால், களைத் தொந்தரவு பெருமளவில் இருக்காது. இதனால் கூடுதல் இலாபம் கிடைக்கும். அறுவடைக்குப் பிறகு வரகு தட்டையையும், பயறுகளின் கொடிகளையும் கால்நடைகளுக்கு தீவனமாக அளித்துப் பயன் பெறலாம். வரகில் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு இலாபத்தைக் கூட்டவும் ஊடுபயிர் சாகுபடி மிகவும் சிறந்ததாகும் என பனைமரத்துப்பட்டி வேளாண்மை துணை இயக்குநர் வேலு தெரிவித்தார்.